[1972 மார்ச் 3

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஐந்து திட்டங்களுக்கு மத்திய நீர் மின்விசைக் குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. பி. எஸ். மணியன் : இத் திட்டங்கள் எவ்வளவு ஆண்டுகளாக மத்திய அரசிடம் இருக்கின்றன? இது போன்ற முக்கியமான திட்டங்களுக்குக் கூட மத்திய அரசிடம் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்ற நிலையை எடுத்துக் கூறி உடனடியாக இத் திட்டங்களை அங்கீகரிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்துதல், கொல்லிமலையின் அருகே அய்யாற்றில் நீர்த் தேக்கம் கட்டுதல், பெரியார் கால்வாய்களை அபிவிருத்தி செய்தல், தொட்டஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம், காவேரியின் குறுக்கே வெள்ளத் தடுப்பு அணை யொன்றை கல்லணையில் கட்டுதல்.

இவைகள் மூன்று நான்கு ஆண்டுகள் ஆகின்றன, சில ஒரு ஆண்டு கால தாமதமாகின்றன. அடிக்கடி வற்புறுத்தி மத்திய அரசிடம் தெரிவித்து வருகிறோம்.

Coastal road at Santhome

* 286 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether a new road is being put up at Santhome, Madras along the seashore; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள மெரினா கடற்கரை முதல், ஓசியானிக் ஓட்டலின் எதிரில் தெற்கு கடற்கரையும் சேரும் இடம் வரையிலும், கடற்கரையை ஒட்டி ரூ 20.85 இலட்சம் செலவில் ஒரு விஸ்தரிப்புச் சாலை போடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.